[2003 ஏப்ரல் 11

கழுகுமலை ஆகிய இரண்டு இடங்களில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. கடம்பூர், ஒட்டப்பிடாரத்திலிருந்து 20 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. ஒட்டப்பிடாரம் பகுதியில், குறிப்பாக நெல் 227 எக்டேர் பரப்பிலும், உளுந்து 7,774 எக்டேர் பரப்பிலும், மிளகாய் 2,452 எக்டேர் பரப்பிலும், மிகக் குறைந்த அளவிலேயே அந்தப் பகுதியிலே சாகுபடி செய்யப்படுகிறது. அதிலிருந்து கிடைக்கக்கூடிய விளைபொருட்கள் அறுவடை காலங்களிலேயே விற்பனை ஆகிவிடுகின்றன. ஆகவே அந்தப் பகுதியிலே வரக்கூடிய உணவுப் பொருட்களுடைய வரத்தை வைத்துப் பார்க்கிறபோது புதிதாக சேமிப்புக் கிடங்கு கட்டுகிற வாய்ப்பு குறைவாக உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

திரு. அ. சிவபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதியில் கயத்தாறு, ஒட்டப்பிடாரம் என இரண்டு ஒன்றியங்கள் உள்ளன. ஒட்டப்பிடாரம் ஒன்றியம் தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதி. ஆகையினால் அங்கு அவர்கள் அந்தப் பொருள்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கு வீடுகளிலே எந்தவித வசதியும் இல்லை. ஆகையினால் வரும் நிதியாண்டிலாவது அதைப் பரிசீலனை செய்து கிடங்கு அமைக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்தக் கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 251, திரு. லா. சந்தானம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

251—

ஊட்டச் சத்துணவு மையம்

***20914—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி யூனியன், அல்லிக்குண்டம் ஊட்டச் சத்துணவு மையம் ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

2003 ஏப்ரல் 11]

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உசிலம்பட்டி தொகுதி, அல்லிக்குண்டம் ஊராட்சி, பெருமாள் கோவில்பட்டியில் புதிதாக குழந்தைகளுக்கு என ஊட்டச்சத்து மையம் ஏற்படுத்தித் தரும் எண்ணம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு முன்தினம்கூட அமைச்சர் அவர்கள் உங்களுடைய வினா வருகிறது என்று சொன்னார்கள். நான்கூட நமக்குக் கிடைக்கும் என்கின்ற ஆவலோடு இருந்தேன். ஆனால் அமைச்சர் அவர்கள் இல்லை என்கின்ற பதிலை அறிவிப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஏனென்றால், உசிலம்பட்டி பகுதி மிகுந்த பின்தங்கிய பகுதி. மிகவும் பின் தங்கிய, தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்ற இந்தப் பகுதியிலே ஊட்டச்சத்து என்பது அந்தப் பகுதியில் இருக்கின்ற குழந்தைகளுக்கு மிகக் குறைவாகவே கிடைக்கின்ற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால்தான் அந்தப் பகுதிக்கு ஒரு முன்னுரிமை கொடுத்து, அந்தப் பகுதியிலே ஊட்டச்சத்து மையத்தை அரசு அமைத்துத் தரும் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் இந்த வினா நான் கொடுத்தது. எனவே அமைச்சர் அவர்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்து அந்தப் பின்தங்கிய பகுதிக்கு இந்த ஊட்டச்சத்து மையத்தை அமைத்துத் தருவதற்கு முன் வருவார்களா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊட்டச்சத்து மையங்கள் அதிக அளவில் தொடங்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் அதிகமான அளவிலே மனுக்களை சமூக நலத் துறைக்குத் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல உசிலம்பட்டி வட்டாரம் என்பது பெண் சிசுக்கொலை நடைபெறுகின்ற பகுதி என்று நம்முடைய அரசுக்கு வந்திருக்கின்ற தகவல்களை அறிந்து மாண்புமிகு அம்மா அவர்கள் தொட்டில் குழந்தை திட்டத்தைக் கொண்டுவருகிறபோதே, உசிலம்பட்டி வட்டாரத்திலே ஒரு வரவேற்பு மையத்தைக்கூட தொடங்கச் செய்தார்கள் என்பது அறிந்ததுதான். ஆகவேதான் உசிலம்பட்டி வட்டாரத்தில் மட்டும் 71 ஊட்டச்சத்து மையங்கள் தற்பொழுது செயல்பட்டு வருகின்றன. அதிலே, இந்த பள்ளிகொண்டம் பஞ்சாயத்திலே உள்ள பெருமாள்கோவில்பட்டியில் 1982 ஆம் ஆண்டு

TRUTH ALONE TRIUMPHS

[2003 ஏப்ரல் 11

முதல் சமுதாய ஊட்டச்சத்து மையம் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்திலே 16 குழந்தைகள், 4 கர்ப்பிணி தாய்மார்கள், 6 பாலூட்டும் தாய்மார்கள், ஆக மொத்தம் 26 பயனாளிகள் ஊட்டச்சத்து உணவை தினந்தோறும் பெற்று வருகிறார்கள். ஆனால் மத்திய அரசு நமக்கு நிதி வழங்குகின்றபோது, கொடுத்திருக்கின்ற விதிமுறைகளின்படி ஒரு ஊட்டச்சத்து மையம் தொடங்க வேண்டுமென்றால், ஆயிரம் மக்கள் தொகையும், இரண்டு மையங்களுக்கு இடையே 1½ கிலோ மீட்டர் தூரமும் இருக்க வேண்டும் என்று மத்திய அரசு நமக்கு விதிகளை விதித்து இருக்கின்றது. அதனுடைய அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டிருக்கின்ற, பெருமாள்கோவில்பட்டி ஊராட்சியிலே 885 ஜனத்தொகை இருக்கின்ற காரணத்தினால் மத்திய அரசின் விதிகளின்படி தற்பொழுது ஊட்டச்சத்து மையம் தொடங்குவதற்கு உரிய சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் கூறுகின்றபோது ஆயிரம் ஜனத்தொகை இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். இப்பொழுது 885 ஜனத்தொகை இருக்கின்றது என்பதை அவர்களே குறிப்பிட்டார்கள். இது பழைய ஜனத்தொகை கணக்கெடுப்புப் பிரகாரம் நடந்தது. இன்றைக்கு இருக்கின்ற நிலையில் அது ஆயிரத்தைத் தாண்டுகின்ற ஒரு நிலை இருக்கின்றது. மேலும் 1½ கிலோ மீட்டர் தூரத்திற்கு மேலே இருந்தால் அமைக்கலாம் என்று சொன்னார்கள். நான் சொல்கின்ற இந்தக் கிராமம் ஏறக்குறைய தற்பொழுது ஊட்டச்சத்து மையம் உள்ள இடத்திற்கும், இதற்கும் 2 கிலோ மீட்டர் தூரமே இருக்கின்ற காரணத்தினால் அதை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

மாண்புமிகு திருமதி. பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் குறிப்பிலே, பழைய கணக்கு இடம் பெற்றிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு புதிய கணக்கு எடுத்து அதன்படி அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சாமி.

முற்பகல் 10-45

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், உசிலம்பட்டிப் பகுதியில் குழந்தைகள் ஊட்டச்சத்து மையம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்று அமைச்சர்

2003 ஏப்ரல் 11]

அவர்கள் கூறியிருக்கின்றார்கள். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், மதுரை மாவட்டம் மிகவும் வறட்சியான மாவட்டம். அதுவும், உசிலம்பட்டித் தொகுதி, என்னுடைய மேலூர் தொகுதி, பேரவைத் தலைவர் அவர்களுடைய திருமங்கலம் தொகுதி எல்லாம் ஏழை கூலித் தொழிலாளர்கள் வசிக்கின்ற தொகுதிகள். அவர்கள் கூலி வேலைக்குப் போகின்றபோது தங்களுடைய குழந்தைகளை அந்த ஊட்டச்சத்து மையத்திலேதான் விட்டுவிட்டுச் செல்ல வேண்டும். ஆகையால் நிறைய இடங்களிலே புதிதாக ஊட்டச்சத்து மையங்கள் அமைப்பதற்கு-மதுரை மாவட்டத்தில் இந்த 3 தொகுதிகளிலும் புதிய ஊட்டச்சத்து மையங்கள் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் மதுரை மாவட்டத்திலேயிருந்து வந்தவள்தான். ஆகவே அந்த மாவட்டத்தைப்பற்றி எனக்கும் தெரியும் என்கிற காரணத்தால் நிச்சயமாக அதிகமான ஊட்டச்சத்து மையங்களைத் தொடங்குவதற்கு அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 252, திரு. எஸ். தாமோதரன், இருக்கையில் இல்லை.

வினா எண் 253, திரு. கு. அண்ணாமலை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

253—

பேருந்து வசதி

***7012—திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழப்பாவூர் ஒன்றியம், மேலகிருஷ்ணப்பேரி ஊராட்சி, முத்துகிருஷ்ணப்பேரியிலிருந்து கழுநீர்குளம், மேலப்பட்டமுடையார்புரம், நாகன்குளம், அருணாப்பேரி வழியாக தென்காசி செல்ல பேருந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?